பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 10 2026 FRIDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** சர்வதேச அளவிலான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வுகாண முடியும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் நிலைப்பாடு என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2)** தூய்மை இந்தியா இயக்கம் வலிமையான மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

**3)** தமிழகத்தில் மதுக்கடைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

**4)** மக்கள் நலனுக்கான திட்டங்கள் எதையும் தவெக அரசு செயல்படுத்தவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**5)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் ஹாக்கியில் தங்கப்பதக்கம் வென்று இந்தியா வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>

உலக அமைதிக்கான நம்பகத்தன்மை வாய்ந்த குரலாக இந்தியா திகழ்கிறது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், உலக அமைதிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் பாராட்டு தெரிவித்திருப்பது நாட்டிற்கே பெருமை அளிப்பதாக கூறியுள்ளார்.

சர்வதேச அளவிலான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வுகாண முடியும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் நிலைப்பாடு என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் கருத்துகள் மிகுந்த கவனம் பெற்றுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தூய்மை இந்தியா இயக்கம் வலிமையான மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, நாடாளுமன்ற வளாகத்தில் தூய்மைப்பணியில் ஈடுபட்டது குறித்து சமூக வலைதளத்தில்

பதிவிட்டுள்ள அவர், தூய்மையை வாழ்வின் ஒரு அங்கமாக கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்ட இந்த இயக்கத்தின்கீழ், அழகான இந்தியாவை உருவாக்குவதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மதுக்கடைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுவிலக்குத்துறையில் ஏற்கனவே உள்ள நிதி முறைகேடுகள் படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

அனைத்துத் துறைகளிலும் நிதி முறைகேடுகள் சரி செய்யப்படும் என்றும் திரு விக்னேஷ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த தவெக அரசு தவறிவிட்டதாக திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அத்தியாவசியப் பொருட்களின் விலை, கடந்த நான்கு மாதங்களில் உயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் — ஒழுங்கு போன்றவற்றில் தமிழகம் வீழ்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும், இவற்றில் தவெக அரசு கவனம் செலுத்தவில்லை என்றும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மின் பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனுக்கான திட்டங்கள் எதையும் மாநில அரசு செயல்படுத்தவில்லை என்று தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தொடர்புடைய தவெக-வினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

<<<<<<>>>>>>

கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதி தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்தேர்வுகளுக்கான முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையை சென்னை உயர்நீதிமன்றம் விலக்கிக் கொண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இன்னும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த தகுதி தேர்வை எழுத வேண்டிய கட்டாயம் இருப்பதால், புதிய ஆசிரியர் தகுதி தேர்வை உடனடியாக நடத்த தேவையான நடவடிக்கைகளை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தருமபுரியில் ஆகாஷ்வாணி பண்பலை தொடங்கப்பட்டு, தற்போது 20-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

விவசாயிகள், தொழில்துறையினர், மகளிர் உட்பட பல்வேறு தரப்பினரின் வரவேற்பை இந்த பண்பலை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Sound Byte — தண்டபாணி — 38 Sec.)*

<<<<<<>>>>>>

அரியலூரில் கட்டுமானப்பணியில் ஈடுபட்டிருந்த மூன்று தொழிலாளர்கள் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — ராம்குமார் — 53 Sec.)*

<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் கதர் கிராம வாரியத்தின் சார்பில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் ஆட்சியர் திரு பிரதாப் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாகர்கோவிலில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — ஆட்சியர் பிரதாப் — 42 Sec. )***

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 31 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் கதர் அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனையை மாவட்ட ஆட்சியர் திரு மதுபாலன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

மதுரை மாவட்டத்தில் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பயணச்சலுகை திட்டத்தை மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று தொடங்கிவைத்தார்.

----------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் காரில் கடத்தி வரப்பட்ட **600** கிலோ போதைப்பொருட்களை பறிமுதல் செய்த காவல்துறையினர், இதுதொடர்பாக இரண்டுபேரை கைது செய்தனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா, **4** தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின், மகளிர் ஹாக்கியில், **44** ஆண்டுகளுக்கு பிறகு, இந்தியா தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் **1-0** என்ற கோல் கணக்கில் சீனாவை வென்று இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இந்த வெற்றியின் மூலம், **2028 Los Angeles**-ல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் நேரடியாக பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

குத்துச்சண்டை மகளிர் **65** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Parveen Hooda**-வும், ஆடவர் **80** கிலோ எடைப்பிரிவில் **Ankush Pangal** -லும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மல்யுத்தம் ஆடவர் **65** கிலோ எடைப்பிரிவில் **Sujeet Kalkal**-லும் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Sepaktakraw** பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

இப்போட்டியில், இதுவரை இந்தியா **16** தங்கம், **25** வெள்ளி, **35** வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>**